# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 254/மா/2022**

**நாள்: 29.12.2022**

திரு. பா. ஆறுமுகம்,
காஞ்சிபுரம் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம். – எதிர்மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் டவுன், நிமிந்தகரை ஒத்தவாடை தெரு, கதவு எண்.35–C –யில் வசிக்கும் திரு. பா.ஆறுமுகம் என்பவரின் 07.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.12.2022–ல் பெறப்பட்டு 254/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் டவுன், நிமிந்தகரை ஒத்தவாடை தெரு, கதவு எண்.35–C –யில் வசிக்கும் திரு. பா.ஆறுமுகம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 07.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். என் வீட்டின் முன் வீடான கதவு எண்.35D/24-35B/3 நிமிந்தகரை ஒத்தவாடை தெரு, காஞ்சிபுரம் டவுன், காஞ்சிபுரம், 9வது வார்டில் உள்ள இடமானது திருமதி மீனாட்சி க/பெ. பழனி என்பவருக்கு சொந்தமானது. மேற்படி இடத்தில் புதியதாக வீடு கட்டி வருவதால் பாதாள சாக்கடை கழிவு நீர் இணைப்பை மெயின் இணைப்பில் இணைக்காமல் சட்டத்திற்கு புறம்பாகவும் நகராட்சி விதிகளுக்கு மாறாகவும் ரோட்டை ஆக்கிரமித்தும் ரோட்டிலேயே 2' x 2' அடி உயரம் ஜங்சன் தொட்டி கட்டியும், பாதாள சாக்கடை குழாயினை ஆழமாக புதைக்காமல் ரோட்டின் மேலே போட்டு இணைத்து என் வீட்டு வாசலில் கழிவு நீர் தேங்கியுள்ளது, மற்றும் எங்கள் தெருவில் உள்ள நபர்கள், இவரை போன்று செயல்படுவதற்கு வழிகாட்டியாக செயல்பட்டுள்ளார். மேலும் இவர்கள் இணைத்துள்ள பாதாள சாக்கடை இணைப்பானது எனது வீட்டு வாசல் நுழைவாயில் ஒட்டி அமைந்துள்ளது. தரைமட்டத்திற்கு மேலே 1 ½ அடி உயரத்திற்கு 2 x 2 நீள அளவில் பெரிய கழிவு நீர் தொட்டியை அமைத்துள்ளார். இந்த ஜங்சன் தொட்டியில் உள்ள கழிவு நீரானது நிரம்பி (over full) ஆகி என் வீட்டு வாசலில் தேங்குவதாலும், என்னால் வீட்டின் உள்ளே நுழைய முடியாத அளவில் துர்நாற்றம் ஏற்பட்டு சுகாதார கேடு ஏற்படுத்தியுள்ளார். நான் மற்றும் எங்கள் வீட்டில் உள்ள குழந்தைகள் எங்கள் வீட்டு வாசற்படியில் தேங்கியுள்ள கழிவு நீரால் நோய்கள் பரவி அடிக்கடி உடல் நிலை சரியில்லாமல் போகிறது. மேலும் முதல் தளத்தில் இருந்து வரக்கூடிய மலம் மற்றும் சிறுநீரின் கழிவுகளை அவருக்கென்று பிரத்யோக சம்பு அமைத்து அதில் இருந்து நகராட்சி பாதாள சாக்கடையுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ளாமல் நேரடியாக இரண்டாவது உயர்மட்ட ஜங்சன் தொட்டி அமைத்து அதற்கான இணைப்பை நேரடியாக நகராட்சி பாதாள

சாக்கடையுடன் இணைக்காமல் காஞ்சிபுரம் நகராட்சி காண்ட்ராக்டர் கண்ணன் என்பவரின் தூண்டுதலின் பேரில் அமைத்துள்ளார். மேலும் ரோட்டை ஆக்கிரமித்து படிக்கட்டு கட்டியுள்ளனர். நான் கடந்த 16.08.2022 தேதியன்று காஞ்சிபுரம் நகராட்சி ஆணையருக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் போன் மூலமாகவும், வாட்ஸ் அப் மூலமாகவும், நேரடியாகவும் மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றனர். இவை அனைத்திற்கும் நகராட்சி ஆணையர் அலுவலகத்திற்கு இடைத்தரகராக செயல்படும் நகராட்சி காண்ட்ராக்டர் திரு.கண்ணன் என்பவர் நண்பர் என்பதால் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகின்றனர். இவர்களின் செயல்களால் அரசுக்கும், நகராட்சிக்கும் நஷ்டத்தையும் வருமான இழப்பையும் ஏற்படுத்தும் வகையில் செயல்படுகின்றார். எனவே ஐயா அவர்கள் மேற்படி மீனாட்சி க/பெ. பழனி என்பவர் கதவு எண்.35D/24-35B/3 நிமிந்தகரை ஒத்தவாடை தெரு, காஞ்சிபுரம் டவுன், காஞ்சிபுரம், 9வது வார்டில் சட்டத்திற்குப் புறம்பாக ரோட்டை ஆக்கிரமித்து படிக்கட்டு கட்டுதல், ரோட்டிலிருந்து 2' x 2' அடி மேல்பகுதியிலேயேயும் ரோட்டிலேயே ஜங்சன் தொட்டி கட்டி மெயின் இணைப்பில் இணைக்காமல் நகராட்சி விதிகளுக்கு மாறாக கழிவு நீர் வெளியேறும் வகையில் செயல்படுவதை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டுமென்று உத்தரவு இட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 07.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. மனுதாரர் 21.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

திருமதி. மீனாட்சி க/பெ. பழனி என்பவர் கதவு எண்.35D/24-35B/3 நிமிந்தகரை ஒத்தவாடை தெருவில் தனக்கு சொந்தமான இடத்தில் புதியதாக வீடு கட்டியுள்ளனர். அவ்வீட்டின் முதல் மற்றும் இரண்டாம் தளத்தின் கழிவு நீர் இணைப்பு முறையாகவும் சட்டபூர்வமாகவும் தரப்படவில்லை. விதிகளுக்கு மாறாக ரோட்டை ஆக்கிரமித்து, ரோட்டிலேயே ஜங்சன் தொட்டி அமைத்து அதில் கழிவு நீர் செல்வதால், அத்தொட்டி நிரம்பி சாலையிலும் எனது வீட்டிற்கு செல்லும் வழியிலும் தேங்கி நிற்கிறது. இதனால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று இரண்டாவது உயர்மட்ட ஜங்சன் தொட்டி அமைத்து அதற்கான இணைப்பை பாதாள சாக்கடையுடன் இணைக்காமல் சாலையில் செல்லும் கழிவுநீர் குழாயில் நேரிடையாக இணைத்துள்ளனர். மேற்கண்ட இடத்தில் உள்ள கழிவு நீர் தொட்டியை slab வைத்து மூடியுள்ளனர். இது குறித்து பலமுறை மாநகராட்சியில் புகார் மனுக்கள் அளித்தும், இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும் மேற்கண்ட வீட்டின் உரிமையாளர் மாநகராட்சியின் இடத்தை ஆக்கிரமித்து தனது வீட்டின் படிக்கட்டுகளை அமைத்துள்ளார். இதுகுறித்தும் மாநகராட்சியில் புகார் மனு அளிக்கப்பட்டது. மேற்கண்ட நேர்வின் மீதும் இன்னும் மாநகராட்சியால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்து, எங்கள் பகுதியில் சுகாதார சீர்கேடு எழாதவாறு விதிகளுக்கு மாறாக அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் தொட்டியை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) காஞ்சிபுரம் மாநகராட்சியின் இளநிலைப்பொறியாளர் 21.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்த இடத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் மாநகராட்சி சாலைப்பகுதியில் பாதாள சாக்கடை தொட்டி மற்றும் படிக்கட்டு அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. அங்கு ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன.

மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டிருந்த பாதாள சாக்கடைத் தொட்டியும் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது. மேலும், புதை வடிகால் குழாயின் இணைப்பை மாநகராட்சி புதைவடிகாலில் நேரிடையாக இணைக்கப்பட்டு, அங்கு கழிவு நீர் வழிந்து செல்லாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தற்போது அங்கு கழிவு நீர் தேங்குவதில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது 20.12.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, காஞ்சிபுரம் மாநகராட்சி, புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட இடத்தை பொருத்துநரால் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொருத்துநர், சம்மந்தப்பட்ட இடத்தினை நேரில் ஆய்வு செய்து மனுதாரர் தெரிவித்துள்ள புதைவடிகால் குழாயின் இணைப்பினை மாநகராட்சி புதைவடிகால் மெயின் இணைப்பில் இணைத்து கழிவு நீர் தேங்கி சாலையில் வழிந்தோடாதவாறும், பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாத வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் திரு.பா.ஆறுமுகம் என்பவரின் வீட்டின் முன் கழிவு நீர் தேங்காதவாறும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், காஞ்சிபுரம் மாநகராட்சி இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

மனுதாரர் திரு.பா.ஆறுமுகம் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள திருமதி.மீனாட்சி என்பவர் கட்டியுள்ள புது வீட்டில் முதல் மற்றும் இரண்டாம் தளத்தின் கழிவு நீர் இணைப்பு முறையாகவும் சட்டபூர்வமாகவும் தரப்படவில்லை. விதிகளுக்கு மாறாக ரோட்டை ஆக்கிரமித்து, ரோட்டிலேயே ஜங்சன் தொட்டி அமைத்து அதில் கழிவு நீர் செல்வதால், அத்தொட்டி நிரம்பி சாலையிலும் மனுதாரரின் வீட்டிற்கு செல்லும் வழியிலும் தேங்கி நிற்கிறது. இதனால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று இரண்டாவது உயர்மட்ட ஜங்சன் தொட்டி அமைத்து அதற்கான இணைப்பை பாதாள சாக்கடையுடன் இணைக்காமல் சாலையில் செல்லும் கழிவுநீர் குழாயில் நேரிடையாக இணைத்துள்ளனர். மேற்கண்ட இடத்தில் உள்ள கழிவு நீர் தொட்டியை slab வைத்து மூடியுள்ளனர். மேலும் மேற்கண்ட வீட்டின் உரிமையாளர் மாநகராட்சியின் இடத்தை ஆக்கிரமித்து தனது வீட்டின் படிக்கட்டுகளை அமைத்துள்ளார். இதுகுறித்தும் மாநகராட்சியில் புகார் மனு அளிக்கப்பட்டது. மேற்கண்ட நேர்வின் மீதும் இன்னும் மாநகராட்சியால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்து, தங்கள் பகுதியில் சுகாதார சீர்கேடு எழாதவாறு விதிகளுக்கு மாறாக அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் தொட்டியை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஆணையர் தெரிவித்து அது தொடர்பான புகைப்படத்தினையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சி இளநிலைப்பொறியாளரும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் அனுப்பிய பிறகுதான் காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணிபுரியும் பொருத்துநர் ஆய்வு செய்துள்ளார். மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சியால் காஞ்சிபுரம் மாநகராட்சி சட்டம் 2013 பிரிவு 258(1) 441ன்படி அளவு கடப்பு

(ஆக்கிரமிப்பு) அகற்ற **14.12.2022** நாளிட்ட அறிவிப்பு திருமதி. மீனாட்சி, க/பெ. பழனி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இவையெல்லாம் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் அனுப்பிய பிறகுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. இது கள அலுவலரின் அலட்சிய போக்கு மற்றும் கடமை தவறிய செயலாகவே இந்த முறைமன்றம் கருதுகிறது. இதற்கு பொறுப்பான சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களின் மீது நடைமுறையிலுள்ள விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் இதுபோன்ற விதிகளுக்கு மாறாக கழிவுநீர் குழாய் இணைப்புகளை நேரடியாக எத்தனை நபர்கள் இணைத்துள்ளனர் என்பது குறித்து ஆராய ஒரு குழு அமைத்து தல ஆய்வு செய்யப்பட வேண்டும். அக்குழுவால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் விதிகளுக்கு மாறாக இணைக்கப்பட்டுள்ள கழிவுநீர் இணைப்புகளை துண்டிக்கவும், அவ்வாறு இணைப்பு கொடுத்தமைக்கு உடந்தையாக இருந்த பணியாளர்கள் மீது உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கவும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

The DMA is directed to ensure compliance with the orders of this Forum within a month's time without allowing the Corporation to take its own sweet time to carryout the instructions of launching disciplinary action against the field officials concerned. This will only create a moral fear and sense of responsibility in the minds of the local field level functionaries and avert repetition of such recurrence in the Corporation.

2022 -ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.பா.ஆறுமுகம்,
த/பெ.பாண்டியன்,
எண்.35 C நிமிந்தகரை ஒத்தவாடை தெரு,
காஞ்சிபுரம் டவுன், காஞ்சிபுரம் – 631 501.

2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உ.திரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

29/12/22

செயலாளர்.